# தொலைக்காட்சி மக்கள் வாழ்வியலில் ஏற்படுத்தும் தாக்கங்கள்: கல்லடி, மட்டக்களப்பு ஒரு சமூகவியல் ஆய்வு - 2015

டயசியா,பு & சத்தியசேகர்,க[*]

**ஆய்வுச் சுருக்கம்**

தற்கால சமூகத்தில் தொலைக்காட்சிப் பாவனை முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளதுடன் அதனால் ஏற்படும் சமூகத்தாக்கங்களும் அதிகரித்துள்ளன. இந்தவகையில் கல்லடி புதுமுகத்துவார கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட பகுதியிலும் தொலைக்காட்சி பாரிய தாக்கங்களைச் செலுத்துகின்றது. தொலைக்காட்சிப் பாவனை மக்கள் வாழ்க்கையில் தாக்கங்களைச் செலுத்துகின்றது என்ற கருதுகோளை மையமாகக் கொண்டு தொலைக்காட்சிப் பாவனை எவ்வாறான தாக்கங்களுக்கு வழிவகுக்கின்றது, அத்தாக்கங்கள் நன்மையானதா, தீமையானதா, வாழ்வியல் அம்சங்களில் எவ்வாறான தாக்கங்களைச் செலுத்துகின்றன, தொலைக்காட்சித் தாக்கங்களின் செல்வாக்கு வயது, பால் அடிப்படையில் எவ்வாறு காணப்படுகின்றது போன்றனவற்றை அறியும் நோக்கங்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வோடு இணைந்ததும், தொலைக்காட்சியின் நீண்ட கால விளைவுகளை எடுத்துக் கூறுவதுமான ஹேப்னரின் "பழக்கப்படுத்தல் அல்லது பண்படுத்தல் கோட்பாடு" பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்விற்காக எண் மற்றும் தர ரீதியான இரண்டும் இணைந்த முறைமையியலினடிப்படையில், முறையான மாதிரி, எளிய எழுமாற்று மாதிரி, படையாக்க மாதிரி என்பன நிகழ்தகவு மாதிரிகளாகவும், இலகு மாதிரி, பங்கு வீத மாதிரி என்பன நிகழ்தகவற்ற மாதிரிகளாகவும், 90 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, பேட்டி, கலந்துரையாடல் போன்ற முறைகள் மூலம் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. மேலும், பிரதேச செயலக அறிக்கை, கிராம சேவகர் அறிக்கை, மாவட்ட செயலக அறிக்கை போன்றன இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக பயன்படுத்தப்பட்டு, தகவல்கள் திரட்டப்பட்டு, பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இதனடிப்படையில், இப்பிரதேசத்தின் தற்கால சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சூழலில் மக்கள் தொலைக்காட்சியைப் பயன்படுத்துவது அதிகமாகவே (84.4%) காணப்படுவதும், தொலைக்காட்சி மக்களின் அந்தஸ்தைத் தீர்மானிக்கும் அடையாளப் பொருளாகப் பார்க்கப்படுவதும், வாழ்வியலில் ஒரு அடிப்படை அம்சமாக கணிக்கப்படுவதும் கிடைக்கப்பட்ட தரவுகளிலிருந்து அறிய முடிந்தது. மேலும், சகல வயதினரிடையேயும் வெளிப்படையானதும், மறைமுகமானதுமான பல தாக்கங்கள் தொலைக்காட்சிப் பாவனையின் மூலம் ஏற்படுவதையும் கண்டறிய முடிந்தது. அத்துடன், தொலைக்காட்சிப் பாவனையானது பொழுதுபோக்கு, விழிப்புணர்வு, அறிவு வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் போன்ற நன்மையான தாக்கங்களுக்கும், குடும்பச் சண்டைகள், வன்முறைகள், கல்வியில் ஆர்வம் குறைதல், ஆடம்பர வாழ்க்கை, பண்பாட்டின் தனித்துவம் இழக்கப்படல், உடல் மற்றும் உளப் பாதிப்புக்கள், மதுபாவனை மற்றும் புகைத்தல் போன்ற தீயபழக்கத்திற்குட்படல், தொடர் நாடகங்களுக்கு அடிமையாதல் போன்ற பல தீமையான தாக்கங்களுக்கும் வழிவகுக்கின்றது என்பதனையும் இவ்வாய்வின் மூலம் கண்டறிய முடிகின்றது.

**பிரதான சொற்கள்:** தொலைக்காட்சி, மக்கள், வாழ்வு, தாக்கங்கள்

To whom correspondence should be addressed: sathiyasegar@gmail.com

[*]Senior Lecturer, Department of Social Sciences, Eastern University of Sri Lanka.